இரா. பஞ்சவர்ணம், கபிலரின் குறிஞ்சிப்பாட்டுத் தாவரங்கள், தாவரத் தகவல் மையம், காமராசர் நகர், பண்ருட்டி 607 106, 2012, பக். 272, ரூ. 300/-

சங்க இலக்கியமான பத்துப்பாட்டில்களுள் அமைந்துள்ள பாடல்களுள் ஒன்றான கபிலரின் 'குறிஞ்சிப் பாட்டில்' இடம் பெற்றுள்ள தாவரங்கள் பற்றிய முழுமையான ஆய்வாக, இரா. பஞ்சவர்ணம் அவர்களை ஆய்ந்து தெளிந்துள்ள 'கபிலரின் குறிஞ்சிப் பாட்டுத் தாவரங்கள்' எனும் நூல் அமைந்து திகழ்கிறது.

காந்தள், ஆம்பல், அனிச்சம், குவளை, குறிஞ்சி முதலான 112 தாவரங்களைக் குறிஞ்சிப் பாட்டில் கபிலர் குறித்துள்ளார் என்பதைக் கூட்டிச் செல்லும் நூலாசிரியர் இரா. பஞ்சவர்ணம், அந்த 112 தாவரங்களுள், 19 தாவரங்களை ஏனைய சங்க இலக்கியங்களில் இடம்பெறாமல், குறிஞ்சிப் பாட்டில் மட்டுமே இடம் பெறுவனவாகக் குறிக்கிறார். குறிஞ்சிப் பாட்டில் கபிலர் குறிக்கும் தாவரங்கள் நூற்றுப் பன்னிரண்டனுள் பகுதி இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், பெருங்கதை, சூளாமணி போன்ற இலக்கியங்களில் இடம்பெறும் தாவரங்களைக் கண்டெடுத்து, அவ்வித் தாவரங்களின் தாவரவியற் பெயர்க ளோடு தனித்தனியே பட்டியலிட்டுக் காட்டு கிறார். வேறு எந்த இலக்கியங்களாலும் குறிக்கப் படாமல், குறிஞ்சிப்பாட்டில மட்டுமே இடம் பெறுவதாய் 'மலரிச்சிலிவகை, கூவிரம், செருவிளை' உள்ளிட்ட ஒன்பது தாவரங்களை ஆசிரியர் இரா. பஞ்சவர்ணம் தனித்துப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இது ஆசிரியரின் தாவரவியல் பற்றிய முழுமையான அறிவையும், இலக்கியங் களில் அவருக்குள்ள பயிற்சியையும், ஆய்வில் அவருடைய நுண்மாண் நுழைபுலத்தையும் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

குறிஞ்சிப்பாட்டுள்ளுள் 99 மலர்கள் மட்டுமே குறிக்கப்பட்டுள்ளதாக உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் காட்ட, இந்நூலாசிரியர் இரா. பஞ்சவர்ணமோ 102 மலர்களை அடையாளப் படுத்தியுள்ளதாகப் பட்டியலிடுவதோடன்றி, அந்த 102 மலர்களுக்கான தாவரவியல் பெயர்கள் உள்ளிட்ட விவரங்களையும் தருகிறார்; அதோடு, அப்பூக்களைத் தற்படமாக – நேரில் பார்ப்பது போன்ற அனுபவ நேர்த்தி – நல்ல வழு வழு தாளில் – ஒளிப்படங்களாகவும் தருகிறார்.

குறிஞ்சிப்பாட்டில் 103 பூக்களுக்கான தாவரங் களேயன்றி, 'வெதிர்' முதலாக 'வேய்' ஈறாக மேலும் பத்து தாவரங்களும் குறிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் ஆசிரியர் இரா. பஞ்சவர்ணம் ஒவ்வொரு தாவரத்திற்கும் Classification, Kingdom, Phyllum, Division, Class, sub class, order, family, Genus, species epithet, Botanical Name, Synonyms, Habit – போன்ற வற்றையும் அரிதின் முயன்று தொகுத்து நிரல் படுத்தித் தந்துள்ளார். மேலும், ஒவ்வொரு தாவரமும் எத்தனைச் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன என்பதைப் பாடலடிகளோடு தந்திருக்கின்ற ஆசிரியரின் கடும் உழைப்பு நம்மை வியப்படையச் செய்கிறது.

ஒரு தாவரத்திலிருந்து மற்றொரு தாவரத்தை வேறுபடுத்திக் காட்டுவணைம் 'இருபெயரீட்டு முறையை' (Binomial) காஸ்பர்ட் பாஹின் (Gaspard Bauhin) என்பார் கி.பி. 17ஆம் நூற் றாண்டிலேயே அறிமுகப்படுத்தினாராக, சங்கப் புலவர் கபிலரோ கி.பி. இரண்டாம் நூற்றாண் டிலேயே முப்பதுவகைத் தாவரங்களை இந்த இருபெயரீட்டு முறையால் அறிமுகப்படுத்தியுள் ளார் என்பதை இந்நூலின் ஆசிரியர் தெளி வாகவும் விளக்கமாகவும் கட்டிச்சென்றுள்ளார். இதன மூலம் பழந்தமிழனின் தாவரவியல் அறிவை வெளிக்கொணர்ந்துள்ளார்.

தாவரவியல் மற்றும் இலக்கியம் பயிலும் – பயிற்றும் – ஆராயும் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய அரிய நூலிது. ஒரு நிறுவனம் செய்ய வேண்டிய பணியைத் தனியொரு மனிதராகச் செய்து வரும் நூலாசிரியர் இரா. பஞ்சவர்ணம் அவர்களுக்கு நம்முடைய பாராட்டும் வாழ்த்தும் என்றும் உரிய. இந்தகைய முயற்சியில் தொடர்ந்து ஈடுபட ஆசிரியருக்கு அரிமா நோக்கு தம்முடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.



பண்ருட்டி மேனாள் நகர்மன்றத் தலைவர் இரா. பஞ்சவருணம் எழுதிய 'கபிலரின் குறிஞ்சிப் பாட்டுத் தாவாங்கள்' என்னும் நூல் இந்தியாவின் புகழ் பெற்ற நூற்காட்சிகளுள் ஒன்றான நெய்வேலியின் புதகக் கணகாட்சியின் 15 ஆவது பிப்பில் 08.07.12 அன்று நீதிபதி ஆ. குலசேகரன் அவர்களால் வெளியிடப்பெற்றது. நெய்வேலிப் பழுப்பு நிலக்கரி நிறுவன அதிபர் திரு சுரேந்திர மோகன் அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் நெய்வேலி நிறுவன மனிதவள இயக்குநர் பி. கே. ஆச்சார்யா, பேராசிரியர் கே. ஏ. குணசேகரன், மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் மெ. சோமசுந்தரம்.

– மதுரைநர்